# பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு

# அறிவித்தல்

## 2024 (2025) க.பொ.த(உயர்தர) பரீட்சையின் மீள் பரிசீலனை முடிவுகளின் அடிப்படையில் பல்கலைக்கழக அனுமதிக்கு தகுதி பெற்ற விண்ணப்பதாரர்களிடமிருந்து 2024/2025 கல்வியாண்டிற்கான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

2025 ஆகஸ்ட் 7 ம் திகதி பரீட்சைத் திணைக்களத்தினால் வெளியிடப்பட்ட 2024 (2025)ம் ஆண்டு க.பொ.த (உயர்தர) பரீட்சைக்கான மறுபரிசீலனை செய்யப்பட்டு வெளியிடப்பட்ட பெறுபேறுகளின் அடிப்படையில் 2024/2025 கல்வியாண்டுக்கான பல்கலைக்கழக அனுமதிக்கு விண்ணப்பிக்க தகுதி பெற்ற விண்ணப்பதாரர்களிடமிருந்து 03 செப்டெம்பர் 2025 முதல் 17 செப்டெம்பர் 2025 திகதி வரையான காலப்பகுதிகளில் ஆன்லைன் விண்ணப்பங்களை கோர பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு (UGC) தீர்மானித்துள்ளது.

விண்ணப்பங்களை சமர்ப்பிப்பது குறித்த கூடுதல் விபரங்கள், பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் உத்தியோகபூர்வ இணையதளத்தில் (www.ugc.ac.lk) வெளியிடப்பட்ட 2024/2025 கல்வியாண்டிற்கான பல்கலைக்கழக அனுமதிக்கான விண்ணப்பங்களை கோருவது குறித்து முன்னர் வெளியிடப்பட்ட செய்தித்தாள் விளம்பரத்தில் குறிப்பிடப்பட்டுள்ளன.

**முக்கியம்**

**கற்கைநெறிகளுக்கான விருப்ப வரிசையை மாற்றுவதற்கு செப்டெம்பர் 17, 2025 முதல் செப்டெம்பர் 23,2025 வரை ஒரு வார கால அவகாசம் வழங்கப்படும் என்பதை நினைவில் கொள்ளவும்.**

**மேலும், பல்கலைக்கழகங்கள் / வளாகம்/ உயர் கல்வி நிறுவனங்களால் ஏற்கனவே நடாத்தி முடிக்கப்பட்ட தகுதிகாண் பரீட்சை / நடைமுறைப் பரீட்சைகளில் விண்ணப்பதாரர் பங்கேற்கவில்லை என்றால் அத்தகுதிகாண் பரீட்சை / நடைமுறைப் பரீட்சைகளுடன் கூடிய கற்கைகளுக்கு விண்ணப்பதாரர்கள் விண்ணப்பிக்க முடியாது**

**தலைவர்**
**பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு**
**01.09.2025**